1976 மார்ச் 21]

Madras Women's Cottage Industries Central Co-operative Society

* 480 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the Government have donated lands in Madras City to the Madras Women's Cottage Industries Central Co-operative Society; and

(b) if so the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

கோயம்புத்தூர் டெக்ஸ்டூல் கம்பெனி

* 481 வினா—**திரு. எம். பூபதி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு கோவையிலுள்ள டெக்ஸ்டூல் கம்பெனியை எடுத்து நடத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டெக்ஸ்டூல் தொழிற்சாலையின் சிக்கல்கள், அதனைப் பல்வகைப்படுத்துவதற்கான வாய்ப்புகள், அதனை முழுமையாகப் பயன்படுத்துவது முதலியவை குறித்து ஆராய்வதற்காக அரசு ஒரு குழுவினை அமைத்தது. இக்குழு அனுப்பிய அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, இந்தக் குழு கொடுத்துள்ள யோசனைகளை அரசு உடனடியாக பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கைகளை எப்போது எடுக்கும் என அறிய முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, குழுவினுடைய பரிசீலனைகளை நிறைவேற்ற கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் அரசாங்கத்திலிருந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அதை அரசு ஆழ்ந்து பரிசீலித்த பின்னர்தான் முடிவு சொல்லப்படும்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, டெக்ஸ்டூல் கம்பெனியை இந்தக் குழுவின் மூலமாக எடுத்து நடத்த உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறிக்கையைப் பற்றி நாம் முடிவு எடுத்ததற்குப் பின்னாலே எந்த எந்த வகையில் நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி: இந்தத் தொழிற்சாலையில் மூவாயிரம், நாலாயிரம் பேர்கள் வேலை செய்தார்கள். இது மூடப்பட்டு இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்ட காரணத்தினால் இதை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1970 மார்ச் 21

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1967-68-ஆம் ஆண்டில் மட்டும் இந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டம் 81 லட்சமாகும். நாம் மேற்கொண்டும் 50 லட்சம் போடவேண்டிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக ஆழ்ந்து யோசித்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது.

திரு. கே. என். குமாரசுவாமி : ஆழ்ந்து யோசித்துத்தான் 50 லட்சம் ரூபாய் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். அதே அடிப்படையில் இது 6 ஆயிரம் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினை என்பதையும் யோசித்து அவர்களுக்கு வேலைவாய்ப் பளிக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் இந்தத் தொழிற்சாலையில் நம் நாட்டு மக்களின் பணத்தை விரயம் ஆக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

திரு. எம். பூபதி : மக்கள் பணத்தை விரயம் ஆக்கவேண்டு மென்று சொல்லவில்லை. அங்கே ஆறாயிரம் தொழிலாளர்கள் வேலையின்றி அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற் சாலையை நல்லமுறையில் உடனடியாக எடுத்து நடத்த முடியாதா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதும் அந்தத் தொழிற் சாலை நடந்துகொண்டு வருகிறது. முன்பு வேலை செய்து வந்த தொழிலாளர்களைவிட இப்போது எண்ணிக்கையில் குறைவாகத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இதுபற்றி நிபுணர்கள் சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். நாம் அரசாங்க பணத்தை எடுத்து முதலீடு செய்வதற்கு முன்னால், அடிப்படையில் ஆழ்ந்து சிலவற்றைப் பரிசீலிக்கவேண்டியிருக்கிறது. இல்லை என்றால் நாளை இதே மன்றத்தில் இப்படி பொதுப்பணத்தை எடுத்து நஷ்டம் ஏற்படும்படியாக ஏன் போட்டீர்கள் என்று கேட்கப்படுகிற கேள்விக்கும் பதில்சொல்ல வேண்டிய வாய்ப்பு ஏற் பட்டுவிடும்.

திரு. எம். எஸ். மணி : டெக்ஸ்டைல் கம்பெனியில் நஷ்டம் ஏற்பட்ட தற்குக் காரணம் என்ன ? எட்டு லட்சம் ரூபாயை காதி கமிஷனிடம் இருந்தும் பெற்றிருக்கிறார்களே, அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்லதொரு கருத்தையும் நினைவூட்டினார்கள். காதி கமிஷன் பல லட்சம் ரூபாய்களை தொடர்ந்து இந்தக் கம்பெனிக்குக் கொடுத்துவந்தார்கள். அதற்கு எந்தவித மான பயனும் கிடைக்கவில்லை என்பதை பின்னாலே தான் கண்டு பிடித்தோம். ஆகவேதான் இப்போதும் ஆழ்ந்து கவனித்தே ஒன்றைச் செய்யவேண்டியிருக்கிறது.